**தேசிய பாதுகாப்பு நிதியம் - 2018**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய பாதுகாப்பு நிதியத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன்கூடிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

எனது அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தை தவிர நிதியத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் நியாயமாக காண்பிக்கும் வகையில் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளது என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

எனது அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 <u>நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்</u>

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாகபோதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் ஈடுபாட்டை தீர்மானிக்கப்படுகின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த

வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலம் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதா எனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்ளுக்கு மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு ‘‘முறையாக திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக் கொள்வதற்காக அவசியமாகவுள்ளது.

### 1.5.2 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவகத்தின் 04 வகைப்படுத்தல் களின் கீழ் வகைப்படுத்தப்பட்ட ரூபா 55.63 மில்லியன் பெறுமதியான நிலையான சொத்துக்களை பதிவு செய்வதற்கு பதிவேடு பராமரிக்கப்பட்டிருக்காமையால் கணக்காய்வின் போது சொத்தக்களை மெய்மையாய்வு செய்ய முடியாதிருந்தது. | நிலையான சொத்துக்கள் பதிவுசெய்வதற்கு இதுவரை பதிவேடொன்று பேணிச் செல்லப்படாதிருந்ததுடன் 2019 ஆம் ஆண்டிலிருந்து முறைப்படி பதிவேடொன்றை பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலையான சொத்துக்களை பதிவேடுகளுக்கு உட்படுத்தி அப்பதிவேடுகளை நாளது வரையாக பேணிச்செல்லப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் வருமானம் மற்றும் செலவினக் கணக்கில் கட்டிட பெறுமானத்தேய்வு மற்றும் அலுவலக உபகரண பெறுமானத்தேய்வாக ரூபா 232,600 தொகை குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய அட்டவணையில் அப்பெறுமதி ரூபா 141,914 எனக் காண்பிக்கப்பட்டிருந்தது, மேலும் கணக்கீட்டு தவறொன்று காரணமாக ஆண்டிற்கான கட்டிட பெறுமானத்தேய்வு ரூபா 226,000 ஆல் கூடுதலாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது, | கட்டிடத்தின் கிரயத்தின் பேரிலும் கணனி உபபாகங்கள் எளிய முறையிலும் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்ததுடன் பேரேட்டில் பதிவுசெய்யும் போது தாமதமொன்று இடம்பெற்றுள்ளது. | மீதி முறையாக ஒப்பீடு செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும் |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 02/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மற்றும் நிதிப்பிரமாணம் 756 | நிதியத்திற்காக மீளாய்வாண்டின் இறுதியில் பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அக்கணிப்பீட்டு அறிக்கை 2019 மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டிலிருந்து பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு குறித்த அறிக்கை சமர்ப்பிக்கப்படும். | 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 02/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மற்றும் நிதிப்பிரமாணம் 756 என்பவற்றின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் . |

### 1.7 நிதி முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிதியத்தால் இலங்கை மத்திய வங்கியில் பேணிச்செல்லப்பட்டு வந்த நடைமுறைக் கணக்கில் 2008 சனவரி மாதத்திலிருந்து யூன் மாதம் வரை ரூபா 01 மில்லியனான பண மீதியொன்றும் ஆகஸ்ட் மாதம் முதல் திசெம்பர் மாதம் வரை ரூபா 96 மில்லியன் முதல் 38 மில்லியன் வரையான வீச்சிலான மீதியொன்று செயற்திறனான முதலீடு செய்யப்படாமல் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | மெத்செவன வீடமைப்பு நலனாலிகளுக்கு பணக் கொடுப்பனவிற்காக இலங்கை மத்திய வங்கியில் பேணிச்செல்லப்பட்டு வந்த நடைமுறைக் கணக்கிற்கு மாற்றப்பட்டதுடன் கொடுப்பனவு நடவடிக்கைகள் தவணைகளாக இடம் பெறுவதால் இத்தொகை கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | நிதி தேவைப்பாடு மற்றும் செலவினம் மேற் கொள்வதற்கு முறைப்படி திட்டமிட்டு அதற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிதியத்தினால் மீளாய்வாண்டில் மீளப் பெற்றுக் கொண்டிருந்த 2 வங்கி நிலையான வைப்புக்கள் தொடர்பாக முறையே 44 நாட்களுக்கும் 34 நாட்களுக்கும் உரிய வட்டி தொகை வங்கியால் நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. அது தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகள் நிதியத்தினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 'மெத்செவன வீடமைப்பு' பகுதியளவு வீடமைப்பு செயற் திட்டத்தின் நலனாலிகளுக்கு பணக் கொடுப்பனவிற்காக இந்த நிலையான வைப்புக்களை பயன்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டதால் மீள் முதலீடு செய்யப்படாமல் அக்காலப்பகுதிக்காக வங்கியால் வட்டி வழங்கப்பட்டிருக்கவில்லை. | முறையான நிதி தேவைப்பாட்டு திட்ட மொன்றின் கீழ் முதலீட்ட பணம் மீள பெற்றுக் கொளள்ல் இடம்பெற வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 87,869,226 ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன் மிகையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 95,979,932 மிகையாக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 183,849,158 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. வருமானம் ரூபா 18,351,161 ஆல் அதிகரித்திருந்த போதிலும் மெத்செவன வீடமைப்பிற்கான செலவினம் ரூபா 199,937,335 ஆலும் நிர்வாகச் செலவினம் ரூபா 1,997,075 ஆலும் வீரு மாணவர் பிரதீப செலவினம் ரூபா 4,000,000 ஆல் அதிகரித்தமை இவ்வீழ்ச்சிக்கு பிரதானமாக காரணங்களாக இருந்தது

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1985 இன் 09 ஆம் இலக்க தேசிய பாதுகாப்பு நிதிய சட்டத்தின் பிரகாரம் தேசிய பாதுகாப்பை மேம்படுத்துவதற்கும் உறுதிப் படுத்துவதற்குமாக நிதியம் பயன்படுத்தப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அதற்காக மீளாய்வாண்டின் போது நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | தேசிய பாதுகாப்பை மேம்படுத்துவது மற்றும் உறுதிப்படுத்துவது போன்ற நோக்கங்கள் மிக முக்கியமான விடயங்களாக இருப்பதால் அதிமேதகு சனாதிபதி மற்றும் நிர்வாக சபையின் ஆலோசனையின் பேரில் அவ்வாறான நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்த எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | 1985 இன் 09 ஆம் இலக்க தேசிய பாதுகாப்பு நிதிய சட்டத்தின் நோக்கங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 1985 இன் 09 ஆம் இலக்க தேசிய பாதுகாப்பு நிதிய சட்டத்தின் 09 ஆம் பிரிவின் பிரகாரம் தமது கடைமைகளை செய்யும் போது காயமேற்பட்ட அல்லது இறந்தால் பொலிஸ் உத்தியோகத்தர்களின் எவரேனும் அங்கத்தவர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டிய போதிலும் | வீரு சுமிதுரு செயற்திட்டத்தின் மூலம் பொலிஸ் உத்தியோ கத்தர்களுக்காக போதியளவில் நலன்கள் வழங்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டதால் வீடமைப்பு நலன்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | 1985 இன் 09 ஆம் இலக்க தேசிய பாதுகாப்பு நிதிய சட்டத்தின் 09 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

| | | |
|---|---|---|
| நலன்களை கொடுப்பனவு செய்யும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வீரு சிசு பிரதீப புலமை பரிசில் பொலிஸ் உத்தியோகத்தர் களின் பிள்ளைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. வீடமைப்பு தேவைப்பாடொன்று இலங்கை பொலிஸ் இடமிருந்து கிடைத்தால் நிர்வாக சபையின் அங்கீகாரத்தின் பேரில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப் பட்டுள்ளது. | |

## 3.2 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| கடமைகளை செய்யும் போது இறந்தால் அல்லது வலது குறைந்த நிலைமைக்கு உட்பட்ட இராணுவ வீரர்களுக்காக பகுதியளவு பூர்த்தி செய்யப்பட்டிருந்த வீடுகளின் எஞ்சிய வேலைகளை செய்வதற்காக ரூபா 250,000 வீதம் மூன்று கட்டங்களில் மீள அறவிடப்படாத ரூபா 750,000 ஆன நிதிசார் நன்கொடையாக வழங்கும் மெத் செவன வீடமைப்பு செயற்திட்டத்தின் கீழ் முப்படையின் 145 படைவீரர்களிற்காக நலன்களை வழங்குவதற்கு 2017 ஆகஸ்ட் மாதத்தின் போது திட்டமிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் அப்படையினரின் எண்ணிக்கை 300 வரை திருத்தம் செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் நிர்வாக சபையால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த நலன்களை படையணியனிரின் உள்ளடக்கம் பின்னைய சந்தர்ப்பங்களின் போது அங்கீகாரமின்றி மாற்றப்பட்டிருந்தது, தெரிவு செய்யப்பட்ட அனைத்து படை வீரர்களுக்கும் முதலாவது தவனை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி அளவில் 07 படைவீரர்களுக்கு இரண்டாம் தவணைப் பணமும் 44 படைவீரர்களுக்கு மூன்றாவது தவணைப் பணமும் கொடுப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை | புதிய செயற்திட்டமொன்று மூலம் நிர்வாக சபையின் அங்கீகாரத்தின் பேரில் துரிதமாக செயற்படுத்தப்பட்டு 2019 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. நலனாலிகளால் வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ள அளவின் பிரகாரம் எஞ்சிய பகுதி மதிப்பீடு செய்யப்பட்டு நலன்கள் வழங்கப்பட்டிருந்தன. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் செயற்திட்டம் செயற்படுத்தப்பட வேண்டும். நலனாலி களின் எண்ணிக்கை தெரிவு செய்யும் மதிப்பீட்டு செயற்பாட்டின் பின்னர் செயற்படுவதால் உள்ளடக்கத்தை பின்னர் மாற்றக்கூடாது |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணககாய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 15 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | தேசிய பாதுகாப்பு______நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் 2019 பெப்ரவரி 28 ஆந் திகதிக்கு முனன்ர் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன் முறையாக நிர்வாக சபையின் தலைவர் உட்பட அங்கத்தவர்களின் கையொப்பத்தை மீண்டும் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டதால் அக் குறைபாடுகளை தீர்வுசெய்யும் போது தாமத மொன்று இடம் பெற்றது. எதிர்காலத்தில் தாமதமின்றி நிதிக் கூற்றுக்களை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16.2 ஆம் பிரிவின் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் நிதியத்தினால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கக்கப்படவில்லை. | எதிர்காலத்தில் செயலாற்றல் தொடர்பான கூற்றொன்று தயாரிக்கப்பட்டு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16.2 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 4.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டிற்காக நீண்டகால நோக்குடன் கூடிய குறித்த சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை நிறைவேற்றுவதை இலக்காக கொண்ட செயற்பாடுகள் நிதியத்தின் ஒழுங்கமைப்பு கட்டமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணியினர் வருடாந்த செயற்பாடுகளுக்கான நிதி தேவைப்பாட்டுத் திட்டம் போன்ற விடயங்கள் உள்ளடக்கப்பட்ட வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்ற நிதியத்தினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | உத்தேச செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 2014/01 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயல்நடவடிக்கைத் திட்டம் ஒன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎவ்/423 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 4.1(இ) பிரிவின் பிரகாரம் நிதியத்தினால் வருடாந்த செயல்நடவடிக்கை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டிலிருந்து பாதீடு தயாரிப்பதற்கு ஆலோசணை வழங்கப்பட்டுள்ளது. | 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎவ்/423 ஆம் இலக்க பொதுநிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**4.4 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2017 இன் 19 ஆம் இலக்க இலங்கை நிலைபேறான அபிவிருத்தி சட்டம் மற்றும் சனாதிபதி செயலாளரின் 2018 மார்ச் 16 ஆந் திகதிய பீஎஸ்/எஸ்பீ/எஸ்பீ/3/201 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நிதியத்தினால் நிலைபேறான அபிவிருத்தி சட்டம் தொடர்பாக அறிந்து அந்நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு தேவையான இலக்குகளை இனங்கண்டு அந்த இலக்குகளை அளவிடுவதற்காக குறிகாட்டிகள் இனங்காணப்பட்டிருக்க வில்லை | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பாக அறிந்து அதன் பிரகாரம் அந்நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற் கொள்வதற்கு எதிர்காலத்தில் எதிர்பார்க்கப்படுகின்றது. | சனாதிபதி செயலாளரின் 2018 மார்ச் 16 ஆந் திகதிய பீஎஸ்/எஸ்பீ/எஸ்பீ/ 3/201 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |